விற்பனைச் சங்கம், புதுடில்லி, ஈரோடு, கரூர், உதகமண்டலம், கடலூர், மதுரை, தூத்துக்குடி, வேலூர் ஆகிய இடங்களில் உள்ள அதன் கூட்டுறவு விற்பனைப் பெருநிலையங்கள் அவற்றின் மூன்று சென்னைக் கிளைகள் ஆகியவற்றின் மூலமாகக் கழகத்தின் பயன்பாட்டுப் பொருள்கள் சிலவற்றை விற்பனை செய்து வருகிறது. இம்மாநிலத்தின் முக்கிய நகரங்களில் உள்ள கூட்டுறவுச் சிறப்பு அங்காடிகளைத் தனது பயன்பாட்டுப் பொருள்களில் சிலவற்றை விற்பனை செய்யுமாறு கழகம் கேட்டுள்ளது. இது தவிர, தமிழ்நாடு உட்பட தென்னிந்திய மாநிலங்களில் பல்வேறு மாவட்டங்களில் இருப்பு வைப்பவர்கள்/வழங்குபவர்கள் பலரை நியமிப்பதன் மூலம் கழகம் விற்பனையை மும்முரப்படுத்தும் பணியை மேற்கொண்டுள்ளது. கழகத்தின் முக்கியமான பொருட்களைக் காட்சியில் வைப்பதற்காக முதல்தரமான காட்சி அறை அலுவலகம் ஒன்றினை சென்னை அரசாங்க மாளிகையில் மலைச்சாலைக்கு எதிரில் தொடங்கும் செயற் குறிப்பும் ஆலோசனையில் உள்ளது.

திரு. கே. போஜன்: இப்பொழுது இருக்கும் விற்பனை நிலையங்களைத் தவிர, நம் மாநிலத்தில் மேலும் பல நகரங்களில் விற்பனை நிலையங்களை ஏற்படுத்தி, விற்பனையை அதிகரிக்க அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அதைத்தான் விவரமாகப் படித்துக் காண்பித்தேன்.

திரு. பி. வேலுசாமி: ஐயா, விற்பனை ஆகாமலிருக்கின்ற உற்பத்திப் பொருள்கள் யாவை? விற்பனை ஆகாமல் இருக்கும் பொருள்களின் மதிப்பு எவ்வளவு? எந்த எந்தப் பட்டரைகள் லாபகரமாக இருக்கின்றன? எவை எவை நஷ்டத்தில் நடைபெறுகின்றன?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அந்த விவரம் என்னிடம் இல்லை.

திரு. சி. கிருஷ்ணமூர்த்தி: தலைவர் அவர்களே, இந்த சிறு தொழில் கார்ப்பரேஷன் நடத்திவரும் தொழிற்சாலைகளைச் சர்க்கார் ஊக்குவிக்கும் முகத்தான் சர்க்காருக்குத் தேவையான சாமான்களுக்கெல்லாம் தனி நபர்களிடத்திலே இன்டென்ட் கொடுக்காமல் இத்தகைய தொழிற்சாலைகளிடத்திலே கொடுக்க சர்க்கார் முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தேவையான பொருள்களை எப்படி வாங்கவேண்டும் என்பதற்கு விதிமுறைகளெல்லாம் இருக்கின்றன. நம்முடைய அரசாங்க உற்பத்தி நிலையங்களுக்கு முதலிடம் அதிலே கொடுக்கப்பட்டிருக்கிறது.

*Madurai–Ramanathapuram road*

* 84 Q.—DR. H. V. HANDE: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether it is a fact that Madurai–Ramanathapuram road via Manamadurai which has a very heavy traffic has not